International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019
Available at: www.ijtlls.com



# இலக்கிய திறனாய்வுக் கொள்கை

**முனைவர். செ.வில்சன்,**
உதவிப்பேராசிரியர்,
அரசு கல்வியியல் கல்லூரி,
ஒரத்தநாடு.

**முன்னுரை**

இலக்கியம் ஓர் இல்லம் என்றால் அதற்குரிய முகவரி இலக்கியம் குறித்த திறனாய்வு எனலாம். இலக்கியத்தின் தரம், பாடுபொருள் பற்றிய நிறை, குறைகளைக் கண்டுணர்ந்து குறைகளைக் களையும், கருவியே திறனாய்வு, குறைகள் உள்ள இலக்கியத்தை “ஊன இலக்கியம்” என்பர். இந்தப் பெயர் மாற வேண்டுமானால் வன்முகத்தன்மையுடன் திறனாய்வு செய்வது மட்டுமே சிறந்தவழி. தமிழில் பல்வேறு துறைகளிலும் உரைநடை நூல்கள் தோன்றின. மேலும் மேல்நாட்டாரின் கூட்டுறவால் மேலை மொழிகளின் இலக்கிய வகைகளும் தமிழில் புகத் தொடங்கின. அவற்றுள் ஒன்றே நாவல். நூறு ஆண்டுகளுக்கு முன் எட்கார் ஆலன் போ அமெரிக்காவில் சிறுகதை எழுதத் தொடங்கினார். அவர் விதைத்த வித்து நன்றாக வளர்ந்து உலகம் முழுவதும் பரந்து இன்று ஆலமரமாக விரிந்துள்ளது. நாட்டுப்புற இலக்கியமும், பயண இலக்கியமும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவியது. கணினி வழி கற்றல், கற்பித்தல் இன்று வேகமாக பரவி வருகின்ற தொழில்நுட்பமாகும்.

**நோக்கங்கள்**

1. திறனாய்வின் தோற்றம் வகைகள் போன்றவற்றினை அறிந்து கொள்வீர்கள்.
2. கற்றல், கற்பித்தலில் திறனாய்வின் தோற்றம் வகைகள கணிப்பொறி, இணையத்தின் பயன்களை அறிந்து வகுப்பறையில் பயன்படுத்த அறிந்து கொள்வீர்கள்.

**இலக்கியத் திறனாய்வு**

ஓர் இலக்கியத்தைப் படைப்பவர் ஒரு பொருளில் சிந்தித்து எழுதி இருப்பார். அதனைப் படிப்பவர் ஒரு வகையாக அறிந்து கொள்வார். இலக்கியப் படைப்பாளியையும் அவர் படைத்த இலக்கியத்தையும் திறனாய்வாளர்கள் படிப்பவர்களுக்கு மிகவும் நெருக்கத்தில் கொண்டு வருகின்றார்கள். தொல்காப்பியத்திற்கும், சங்க இலக்கியங்களுக்கும் பழைய உரைகள் இல்லாவிட்டால் அவற்றை நம்மால் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. சிலப்பதிகாரத்தில் காணப்பெறும் அரங்கேற்று காதைச் செய்திகள் புரியாமலே போய் இருக்கும். திருக்குறளில் அவ்வளவு நுண்மையான செய்திகள் இருப்பதால்தான் பத்துப்பேர் அதற்கு உரை எழுதி இருக்கின்றார்கள். தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு ஐந்து உரையாசிரியர்கள் உரை எழுதி இருக்கின்றார்கள். எனவே உரையாசிரியர்கள் ஒரு நூலுக்கு உரை எழுதி இருந்தாலும் அவர்களும் திறனாய்வாளர்களே ஆவர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019 Available at: www.ijtlls.com



**1. திறனாய்வுக் கலை**

மேலை நாடுகளில் கிரேக்க மொழி போன்றவற்றில் திறனாய்வுக் கலை என்பது ஒரு தனிக் கலையாகப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே வளர்ந்துள்ளது. தமிழில் தனிக்கலையாக வளரவில்லையே தவிர உரையாசிரியரின் உரைகளில் திறனாய்வுக் கூறுகளை நிறையக் காணலாம். திறனாய்வுக் கலை தொடர்பாகப் பல நூல்கள் இன்று தமிழில் காணப்பெறுகின்றன.

| | | |
|---|---|---|
| மு. வரதசராசன் | : | இலக்கிய ஆராய்ச்சி |
| அ.ச.ஞானசம்பந்தன் | : | இலக்கியக் கலை |
| தா. ஏ. ஞானமூர்த்தி | : | இலக்கியத் திறனாய்வியல் |
| தொ.மு.சி.ரகுநாதன் | : | இலக்கிய விமர்சனம் |
| க.பாலசந்திரன் | : | இலக்கியத் திறனாய்வு |
| தமிழவன் | : | தமிழ்க் கவிதையும் மொழிதல் கோட்பாடும் |
| ஜெயமோகன் | : | நவீனத் தமிழ் இலக்கிய அறிமுகம் |

**2. திறனாய்வின் தோற்றம்**

இலக்கியம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானதாகும் அதன் திறனாய்வும், யாராவது ஒருவர் ஒரு பாடலையோ, உரைநடையையோ படைத்திருப்பின் அதனைக் கற்ற ஒருவர் அது சிறந்தது என்றோ, மட்டமானது என்றோ கூறும்பொழுது தினறாய்வு அங்கே தோன்றிவிடுகிறது. ஆகவே, திறனாய்வு என்று கூறினால் 'முடிவு கூறல்' அதனுள் அடங்கியிருத்தல் கண்கூடு. இலக்கியத் திறனாய்வாளன், ஓர் இலக்கியத்தை நன்கு கற்றுத் தனது கூர்ந்த அறிவினாலும், அக் கலையை அனுபவிக்கத் தனக்குள் தனிப்பட்ட உணர்வினாலும், நன்கு ஆராய்ந்து, அவ்விலக்கியத்தின் குறை, நிறைவுகளை மதிப்பிட்டு, அது சிறந்தது என்றோ மட்டமானது என்றோ கூறுபவனாவான். இத்திறனாய்வு என்ற சொல் இலக்கியத்தில் பயன்படும்போது, குறைவு-நிறைவு கூறும் நூல்களை மட்டும் குறிக்காமல் இலக்கியத்தைப் பற்றிக் கூறும் இலக்கியங்களையும், அதுபற்றி வெறும் ஆராய்ச்சி செய்யும் நூல்களையும், அதன் பேருரைகளையும் உட்கொண்டு குறிக்கிறது. எனவே, திறனாய்வு செய்யும் நூலுக்கும், எதனைப் பற்றி இத் திறனாய்வு நிகழ்கிறதோ அந்த இலக்கியத்திற்கும் உள்ள வேறுபாடு என்னவென்று அறிய வேண்டும். வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்து அதன் சிறந்த பண்புகளைக் கூறுவது இலக்கியம் எனப்படும். அவ்விலக்கியத்தை ஆராய்வது திறனாய்வு எனப்படும்.

இலக்கியத் திறனாய்வும் ஓர் இலக்கியமாகலாம். ஒரு நூலைத் திறனாய்வு செய்யப் புகுந்த நூல் அம் மூலநூலை நாம் கற்கத் தூண்ட வேண்டும். மூலநூலைப் பற்றி அறிய நம்மை அது தூண்டினாலும் தூண்டாவிட்டாலும் நடுவுநிலை பிறழாமல் எழுதப்பட்டிருந்தால்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019

Available at: www.ijtlls.com

அத் திறனாய்வாளன் கருத்தைக் கூறுகின்றமையால் அதுவும் ஓர் இலக்கியமென்றே கூறுதல் வேண்டும். இக்கருத்தைப் பழந்தமிழர் நன்கு உணர்ந்தியிருந்தனர்.

**3. இன்றைய திறனாய்வின் நிலை**

இன்று தமிழ்மொழியில் தோன்றியுள்ள திறனாய்வு நூல்களைப் பார்த்துவிட்டால், பழந்தமிழன் முறையே மிகச் சிறந்தது என்ற எண்ணம்கூடத் தோன்றுகிறது. 'நூல் மதிப்புரைகள்' என்ற தலைப்பில் பத்திரிக்கைகளிலும், வானொலியிலும் வெளிவரும் திறனாய்வுகளைக் காண்கிற தமிழன் எவர்தான் வியப்படையாமல் இருக்க முடியும்? பெரும்பாலும் நூலைப் படியாமலே திறனாய்வு செய்யப்படுகிறது. நூல் எழுதித் திறனாய்வுக்கு அனுப்பியவர்க்கே இவ்வனுபவம் தெரியும். ஒருவேளை அதனை ஒரு திறனாய்வாளர் படித்துவிட்டாலும், அவர் ஆய்வு, ஒரே புகழ்மாலையாக இருக்கும், அல்லது ஒரே ஒப்பாரியாக இருக்கும். முதல் வகையைச் சேர்ந்தவர், நன்கு அச்சியற்றம் பெற்றிருக்கிறது அழகான புத்தகசாலைக்கும் கைக்கும் அணிகலம் என்ற முறையிலும் இதனைவிடச் சிறந்த ஒரு நூல் தோன்ற முடியாது' என்றும் 'விமர்சனம்' செய்வார். இரண்டாவது வகையார் 'ஏன் இந்நூல் தோன்றிற்று என்று தெரியவில்லை' என்பார்.

இவ்வாறு கூறுவதனால் திறனாய்வு நூலே தோன்ற வேண்டாம் என்று கூறுவதாக யாரும் நினைத்துவிட வேண்டாம், திறனாய்வு நூல்கள் இல்லையென்றால் இலக்கிய உலகின் சிறந்த ஓர் உறுப்பு இல்லை என்றே கூறுதல் வேண்டும். மேலைநாட்டைப் பொறுத்தவரை இக்குறைபாடு வேறு வகையில் இருக்கிறது. அங்குத் தோன்றும் இலக்கியங்களைக் காட்டிலும் திறனாய்வு நூல்கள் மிகுதியாக உள்ளன. திறனாய்வு நூலுக்கும் ஒரு திறனாய்வு நூல் தோன்றும் நிலைகூட அங்கே சாதாரணம்.

**4. இலக்கியத் திறனாய்வின் பயன்:**

திறனாய்வினால் சமுதாயத்திற்கும் இலக்கியப் படைப்பு வரலாற்றிற்கும் பயன்கள் உண்டாகின்றன. இலக்கியத் திறனாய்வில் கீழ்க்காணும் பயன்கள் உண்டாகின்றன.

1. சிறந்த கலைப்படைப்புத் தேர்ந்தெடுக்கப்படுகிறது.
2. இலக்கியக் கொள்கைகள் உருவாகின்றன.
3. புதிய இலக்கியங்களைப் படைக்கப் படைப்பாளிகள் தூண்டப்படுகின்றனர்.
4. இலக்கிய வரலாற்றிற்குத் தேவையான தகவல்கள் கிடைக்கின்றன.
5. இலக்கியத் திறனாய்வு வரலாறு உருவாகிறது.
6. இலக்கியப் பிழைகள், இலக்கணப் பிழைகள் நீங்குகின்றன.
7. சமூக வரலாற்றை அறிந்து கொள்ள முடிகிறது.
8. கலையின் சிறப்பும் அதனைக் கற்போர்க்கு உண்டாகும் மகிழ்வும் சமூக வளர்ச்சிக்கு உதவுகின்றன.
9. கலை, கலைக்காக மட்டுமன்று. கலை சமூகத்திற்காகவும் இருக்கிறது என்பதை வெளிப்படுத்தல்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019 Available at: www.ijtlls.com

10. தனிமனிதரின் ஆளுமை, தனி இலக்கியச் சிறப்பு முதலியன அறிந்து கொள்ளப்படுகின்றன.

**5. திறனாய்வாளரின் தகுதிகள்:**

இன்றைய நிலையில் எண்ணற்ற இலக்கிய மலர்கள் மலர்கின்றன. ஊடகங்களின் வழியே அதிக அளவில் மக்களிடையே மணம் பரப்புகின்றன. 'நூல் விமர்சனம்' பற்றியே தனிபத்திரிகைகள் தொடங்கப் பெற்றுள்ளன. நூலகம், உங்கள் நூலகம், புத்தகம் பேசுது, நூல் விமர்சனம் போன்ற சிற்றிதழ்கள் நூல் விமரிசனத்திற்காக வெளி வருகின்றன. தினமணி போன்ற நாளிதழ்கள் நூல் விமரிசனங்களை எழுதி வருகின்றன. தற்காலத்தில் வெங்கட்சாமி, அசோகமித்திரன், அ.மார்க்ஸ், பொ. வேலுச்சாமி, பா.மதிவாணன், த.முருகேசபாண்டியன், க.பஞ்சாங்கம், ராஜ்கௌதமன் முதலியோர் நல்ல திறனாய்வாளர்களாகவும் விமர்சனம் செய்பவர்களாகவும் உள்ளனர். திறனாய்வாளர்களிடையே அமைய வேண்டிய தகுதிகள் கீழ்க்கண்டவாறு தரப்படுகின்றன.

1. திறனாய்வாளர், பல நூல்களைக் கற்றறிந்தவராகவும், பழுத்தப் புலமை உடையவராகவும், புதிது புதிதாய்ப் பயின்று இன்புறும் இயல்புடையவராகவும் இருத்தல் வேண்டும். விரிந்து பரந்துபட்ட நூலறிவு அவருக்கு மிகவும் இன்றியமையாதது.
2. ஒரு மொழி நூல்களில் மட்டுமன்றிப் பலமொழி நூல்களிலும் இலக்கிய அனுபவம் பெற்றவராய் இருப்பது நல்லது. அப்போதுதான் இலக்கியம் பற்றிய மதிப்பீடுகளைத் திறம்பட வெளியிட முடியும்.
3. கவிதை, நாடகம், புதினம் போன்ற எந்தத் துறையைப் பற்றித் திறனாய்வு செய்கின்றாரோ அந்தத் துறை சார்ந்த மற்றும் அதனோடு தொடர்புடைய பல நூல்களையும், கலை நுணுக்கச் செய்திகளையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.
4. தான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட இலக்கியத்தைப் பன்முறை பயின்று அதன் உயிர்ப்பான பகுதியைத் தெள்ளத் தெளிய உணர்ந்து கொள்ள வேண்டும்.
5. நூலின் நிலையான பகுதிகள் எவை, நிலையில்லாத பகுதிகள் எவை என்பதைப் பகுத்தறிய வேண்டும்.
6. இலக்கியம் படைத்தவர் சில கலை நுணுக்கங்களாலும், அறக்கோட்பாடுகளாலும் இயக்கப்பட்டிருந்தால் அவற்றைத் திறனாய்வாளர் தெரிந்து தெளிய வேண்டும்.
7. கால வெள்ளத்தைக் கடந்து ஒரு நூல் வாழ்வதற்குரிய காரணங்களை, நூலாசிரியரின் படைப்பாற்றலை மற்றவர்களும் கண்டு மகிழும் வகையில் வெளிக் கொணர வேண்டும்.
8. நூலாசிரியரின் தனிச் சிறப்பினையும், உள்ளத்து உணர்வுகளையும், கற்பனைத் திறனையும் கண்டறிய முனைய வேண்டும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019 Available at: www.ijtlls.com


9. வரலாற்றுப் பின்னணியையோ, குறிப்பிட்ட சமூகச் சூழலையோ மையமாகக் கொண்டு படைக்கப்பட்டிருந்தால் அப்பின்னணியை அல்லது சூழலைத் திறனாய்வாளன் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.
10. மானிடவியலின் கடந்த கால வரலாற்றைப் பற்றி அறிவு தெளிவு மிக்கவராகவும், அருள் ஒழுக்கம் பூண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இவை போன்றன திறனாய்வாளருக்குரிய இன்றியமையா தகுதிகளாகக் கருதப்படுகின்றன.

**6. திறனாய்வாளருக்குரிய பணிகள்:**

"இலக்கியத்தை நன்கு புரிந்து அனுபவிக்கும் இயல்பை வளர்ப்பதே இலக்கியத் திறனாய்வின் இன்றியமையாப் பணியாகும்" என்று திறனாய்வுப் பணி குறித்து டி.எஸ்.எலியட் என்பார் குறிப்பிடுகின்றார். இலக்கியத் திறனாய்வின் இன்றியமையாப் பணியினைக் காணும்போது உரையாசிரியர்களின் பணி திறனாய்வுப் பணியே என அறியலாம்.

1. திறனாய்வாளர்கள் செய்துள்ள பணிகளைக் கீழ்வருமாறு பகுத்துக் காட்டலாம்.
2. மூலநூற் பொருளைத் தெளிவாகக் காட்டுதல்.
3. சொல்லாட்சி, சொற்றொடர்களின் சிறப்பான பொருளை நன்கு விளக்கிக் காட்டல்.
4. நூல் கருத்துகளைத் தொடக்கத்தில் தொகுத்துச் சொல்லுதல்.
5. பிழையான கருத்துகளைத் தக்கச் சான்றுடன் மறுத்தல்.
6. குறிப்பிட்ட நூற்பொருளின் பின்னணியில் நமக்குத் தெரியாவண்ணம் மறைந்து கிடக்கும் அரிய செய்திகளை வெளிப்படுத்துதல்.
7. மூலநூலில் இடைச்செருகல் இருப்பின் அவற்றைக் களைந்து எறிய முற்படுதல்.
8. காப்பியம் போன்ற இலக்கிய வகையில் வரும் கதைக் கோப்பையும், பல்வகை மனிதரின் பல்வகைப் பட்ட பண்புகளையும் செயல்முறைகளையும் காவியக் கட்டுக்கோப்புக்கு ஏற்ற வண்ணம்படுத்திக் காட்டல்.
9. நூலின் போக்கிற்குப் பொருத்தமானவை இவை என்றும், பொருத்தமற்றவை இவை என்றும் சுட்டிக்காட்டுதல்.
10. உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி போன்றவற்றை நயமுடன் விரித்துக் காட்டுதல்.
11. மூலநூலில் மறைந்துவிட்டதாகக் கருதப்படும் செய்யுள்களைக் கண்டறிந்து கூறுதல்.
12. இசை, நாடகம் போன்ற துறைகளைப் பற்றிய அரிய கலைச் செல்வங்களை ஆங்காங்கே கொண்டு வந்து வெளிப்படுத்தல்.

மேற்கண்ட பணிகள் திறனாய்வாளரது பணிகளாகப் போற்றப்படுகின்றன.

**திறனாய்வின் வகைகள்**

1. வரலாற்று முறைத் திறனாய்வு
2. படைப்புவழித் திறனாய்வு
3. மரபுவழித் திறனாய்வு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019 Available at: www.ijtlls.com



4. விதிமுறைத் திறனாய்வு
5. அழகியல் திறனாய்வு
6. விளக்கமுறைத் திறனாய்வு
7. மூலப்பாடத் திறனாய்வு
8. பகுப்புமுறைத்திறனாய்வு
9. ஒப்பீட்டு முறைத் திறனாய்வு
10. மதிப்பீட்டு முறைத் திறனாய்வு

எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

**1.வரலாற்று முறைத் திறனாய்வு**

இத்திறனாய்வினை இருவகையாகப் பிரிக்கலாம். 1. நாட்டு வரலாற்றினை அறிதல் 2. ஆசிரியர் வரலாற்றினை அறிதல்

இலக்கியம் ஓர் காலக் கண்ணாடி. இலக்கியத்தினை முழுமையாகச் சுவைக்க வேண்டுமானால் அந்த இலக்கியம் தோன்றிய கால வரலாற்றை அறிதல் வேண்டும். படைப்பாளி ஏதோ சூழ்நிலைக் காரணிகளாலேயே ஒரு படைப்பினைப் படைப்பான். எனவே அவன் வாழ்ந்த கால சூழலை அறிய வேண்டும். ஆசிரியர் தன் உள்ள உணர்ச்சிகளையும், கிளர்ச்சிகளையும் படைப்பிலக்கியத்தில் வடித்தால், அவனது வாழ்வினை ஆராய்ந்து அறிதல் இன்றியமையாததாகும். விடுதலை கால மக்களின் வரலாற்றையும் உணர்வையும் அறிந்தால்தான் பாரதியின் பாடல்களை நாம் முழுமையாக சுவைக்க முடியும். ஒரு காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் ஏற்றுக் கொண்டனரா இல்லையா என்பதையும் அறிய வேண்டுமானால் வரலாற்றறிவு நமக்குத் தேவைப்படுகிறது.

**2.படைப்பு வழித் திறனாய்வு**

ஒரு இலக்கியத்தினை அந்த இலக்கியத்தின் அடிப்படை அமைப்புகளைக் கொண்டே ஆராய்வது படைப்பு வழித் திறனாய்வாகும். கம்பர், வால்மீகி போன்ற பெரும் புலவர்களின் சிறந்த படைப்புகளை ஆராயும்போது ஒவ்வொருவரின் படைப்பிலும் அமைந்துள்ள அடிப்படை அமைப்பினையும், நோக்கினையும், போக்கினையும் அறிதல் வேண்டும். அப்படியானால் தான் அப்படைப்பின் தன்மையினை நாம் உணரமுடியும். இத்திறனாய்வு படைப்பாளியின் படைப்புக்கு முக்கியத்துவம் தருகின்றது. ஆசிரியர் இந்த நோக்கில் படைப்பினை அணுகி மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும்.

**3.மரபு வழித் திறனாய்வு**

முன்னோர்களால் வகுத்துரைக்கப்பட்ட இலக்கிய இலக்கண மரபுகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு படைப்பினை ஆராய்வது மரபு வழித் திறனாய்வாகும். சங்க இலக்கியங்கள் பிற்கால இலக்கியங்களைத் திறனாயும்போது முறையே தொல்காப்பியம், நன்னூல் இலக்கண விதிகளை எடுத்துக்கொண்டு இலக்கியத்தில் பொருந்தி வரும் தன்மை பற்றி திறனாய்வது மரபு வழித் திறனாய்வாகும். ஒவ்வொரு காலங்களிலும் ஒவ்வொரு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019 
Available at: www.ijtlls.com

வகையான இலக்கியங்கள் மலர்ந்தன. சமய வளர்ச்சியில் மக்கள் அதிக ஆர்வம் கொள்ளும்போது பக்தி இலக்கியங்கள் தோன்றின. கதைகளிலும் கற்பனைகளிலும் களித்திருக்கும்போது புராண இலக்கியங்கள் பிறந்தன. மறுமலர்ச்சி, காலங்களில் புரட்சிப் படைப்புகள் மலர்ந்தன. கட்டுப்பாடுகளையும் விதிகளையும் மீறி இன்று புதுக்கவிதைகள் புறப்பட்டன. கட்டுப்பாட்டை வலியுறுத்தி இத்திறனாய்வு அமைவதால் இது மிகுதியாகப் போற்றப் படுவதில்லை.

**4.விதிமுறைத் திறனாய்வு**

இலக்கியம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்று இலக்கியம் வகுக்கும் நெறிமுறைகளை அளவுகோலாகக் கொண்டு அமைவதே விதிமுறைத் திறனாய்வாகும். ஒரு இலக்கியம் இன்ன வகையில்தான் அமைய வேண்டும். இன்ன வகையான கலை நுணுக்கங்களைத்தான் பெற்றிருக்க வேண்டும். இன்ன போக்கில்தான் அதன் நடை அமைய வேண்டும் என்பன படைப்பாளியை விதிப்படுத்தி அதன்வழி நடத்திச் செல்வதே இத்திறனாய்வு முறை. இம்முறைப்படி இலக்கியங்கள் எழுதப்பட்டும், ஆராயப்பட்டும் வந்தால் ஒரு மொழியின் ஒழுங்கமைப்பு குறையாமல் பாதுகாக்க முடியும். நமது சங்க இலக்கியப் பாடல்கள் இவ்வகையைச் சார்ந்தவை. படைப்பாளி உருவாவதில்லை. மாறாக உருவாக்கப்படுகிறார். புறப்பொருள் வெண்பா மாலை இவ்வகையில் எழுந்த நூலாகும்.

**5. அழகு (அ) முருகியல் முறைத் திறனாய்வு**

இலக்கியத் திறனாய்வில் இதுவே நேரடித் திறனாய்வு என்று கூறப்படுகிறது. இத்திறனாய்வு முறையினை அறிஞர்கள் கொள்கையில் திறனாய்வு என்றும் அழைக்கின்றனர். ஒரு இலக்கியத்தின் சொற்சுவை, பொருட்சுவை, அணிநலம், உணர்ச்சி, கற்பனை வடிவம் முதலிய அழகு அமைப்புகளை ஆராயும் முறையே முருகியல் முறைத் திறனாய்வாகும்.

**6.விளக்க முறைத் திறனாய்வு**

ஒரு படைப்பின் படைப்பாளனையும், அவனது படைப்பில் அமைந்துள்ள பல்வேறு வகையான கூறுகளையும் விளக்கமான முறையில் ஆய்வு செய்தல் விளக்கமுறைத் திறனாய்வாகும். இன்று இவ்வகைத் திறனாய்வே பெரிதும் பின்பற்றப்படுகிறது. இத்திறனாய்வு முறையில் படைப்பாளியின் படைப்பு விவாதிக்கப்படுகிறது. படைப்பின் பல பகுதிகளும், அமைப்புகளும் பகுத்துக் காணப்படுகின்றன. சுருங்கச் சொன்னால் படைப்பவரின் படைப்புக் கருவூலத்தை திறந்து காட்டிப் படிப்பவர்களுக்குப் பல செய்திகளும் நன்கு தெரியும்படியாக விளக்குவதே விளக்க முறைத்திறனாய்வாளரின் கடமையாகும். ஆசிரியர் இவ்வகைத் திறனாய்வினை மேற்கொண்டு பாடப்பொருள் குறித்த கூடுதல் தகவல்களை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

**7.மூலப்பாடத் திறனாய்வு**

ஒரு குறிப்பிட்ட படைப்பில் பாடவேறுபாடுகள் மிகுதியான நிலையில் அவற்றினை ஆராய்ந்து இன்ன கருத்துகள் படைப்பாளனால் அமைக்கப்பட்டது என்று கண்டறிவது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019
Available at: www.ijtlls.com



மூலப்பாடத் திறனாய்வாகும். நூலை மற்றொருவர் படி எடுப்பதாலும், பல்வேறு பதிப்புகள் வெளிவரும் போதும் ஏற்படும் அச்சுப் பிழைகளாலும், சமய, காழ்ப்புணர்ச்சிகளாலும் பாட வேறுபாடுகள் தோன்றுகின்றன. இதனால் படிப்பவர்களுக்கு குழப்பம் ஏற்படும். இக்குழப்பத்தை தவிர்க்க இத்திறனாய்வு பயன்படும். மனோன்மணியம் எழுதிய சுந்தரம் பிள்ளை வாழ்த்துப் பாடலாக "நீராடும் எனத் தொடங்கும் பாடலை எழுதினார். அதுவே தமிழ்தாய் வாழ்த்தாகவும் வைக்கப்பட்டுள்ளது. மூல நூலாசிரியர் "திரவிட நல் திருநாடும்" என எழுதியது இன்று "திராவிட நல் திருநாடும்" என அச்சிடப்பெற்று பாடப்படுகிறது.

**8.பகுப்பு முறைத் திறனாய்வு**

நூலின் ஒவ்வொரு கூறினையும் பகுத்து ஆராயும் முறையே பகுப்பு முறைத் திறனாய்வு ஆகும். அதிகாரத்திற்கு பத்து பத்து பாடல்களாக திருவள்ளுவர் பாடினார். இது ஓர் ஒழுங்கான முறைவைப்பு. சிந்தாமணி இலம்பகங்களாகவும், கம்பராமாயணம் படலங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்பினையும் தொடர்பினையும் ஆராய்தலே பகுப்பு முறைத் திறனாய்வாகும்.

**9.ஒப்பீட்டு முறைத் திறனாய்வு**

இதனைத் தமிழில் தீர்ப்பு உரைக்கும் திறனாய்வு அல்லது முடிவுநிலை கூறும் திறனாய்வு என அழைக்கின்றனர். இரு வேறு இலக்கியங்களை எடுத்துக் கொண்டு ஒப்பிட்டு ஆராய்தல் இத்திறனாய்வு முறை ஆகும். ஒற்றுமை வேற்றுமைக்கான பட்டியலிடலாமே ஒழிய இவ்விலக்கியம் தான் சிறந்தது என கருத்து கூறுதல் கூடாது. ஒரு காலத்தின் குறிப்பிட்ட இலக்கியப் போக்குகளை மற்றொரு காலத்தின் இலக்கியப் போக்கோடு ஒப்பிட்டு ஆராயலாம். வழிநூல் அல்லது மொழிபெயர்ப்பு நூலை மூல நூலுடன் ஒப்பிடலாம். திறனாய்வு செய்யும் இரு நூல்களுக்கிடையேயும் ஒரு பொதுத்தன்மை இருத்தல் அவசியம். தேசிய உணர்வினை மக்களிடையே பரப்புவதற்கும் இம்முறைத் திறனாய்வு பயன்படும்.

**10.மதிப்பீட்டு முறைத் திறனாய்வு**

சிறந்த படைப்புகள் குறித்து இரு திறனாய்வாளர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் தோன்றினாலும் அவ்வேறுபாடுகளிடையேயும் சிறப்பான கூறுகள் பற்றியும், அதன் மதிப்பீடு பற்றியும் அடிப்படையான ஒற்றுமை இருப்பதைக் காணலாம். ஒரு படைப்பை உண்மையாகவே மதிப்பிடுவதற்கு விருப்பு வெறுப்பற்ற நடுநிலையான ஆராய்ச்சி மனப்பான்மை அவசியமாகும். ஒரு படைப்பைப் பலரும் பாராட்டுகின்றார்கள் என்பதற்காக ஆசிரியரும் பாராட்டக்கூடாது. பலரும் தூற்றுகிறார்கள் என்பதற்காக ஆசிரியரும் குறை சொல்லக் கூடாது. ஒரு படைப்பை சுவைக்கும் வாசகர் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அதை சிறந்ததாகக் கொள்ளலாம். சில படைப்புகளை நன்கு புலமையுடையோர் மட்டுமே அணுகமுடியும். எனவே அப்படைப்பு தரம் தாழ்ந்ததாகாது. ஒரு இலக்கியம் தரும் இன்பம் தகுதியுடையதாகவும், தரமுடையதாகவும் அமையுமானால் அவ்விலக்கியத்தை சிறந்த இலக்கியமாகக் கொள்ளலாம். ஆசிரியர்களுக்கு இலக்கியத்தினை திறனாயும் புலமை மிக

Tamileelam Archive

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019
Available at: www.ijtlls.com



அவசியம். ஒவ்வொரு இலக்கிய வகைகளுக்கும் ஒவ்வொரு வகையான இலக்கியத் திறனாய்வு முறை பயன்படும். ஆசிரியர் விளக்கும் செய்தியினை மாணவர்களுக்கு விளக்கமாகச் சொல்ல இலக்கியத் திறனாய்வுப் பயிற்சி ஆசிரியருக்குப் பயன்படும்.

பல்வேறு மொழிகளில் பல்வேறு காலங்களில் தோன்றிய இலக்கியங்களையும் புதுமை நோக்கோடு அன்றாடம் வெளிவந்து கொண்டிருக்கும் இலக்கியப் படைப்புகளையும், அறிந்து சிறந்தவற்றை மாணவர்கட்கு உரைக்க வேண்டும். எதிர்காலச் சந்ததியினருக்கு அறிவுக் கண் திறக்கும் ஞான சூரியர்களாகிய ஆசிரியர்கள் நல்ல திறனாய்வாளர்களாக இருக்க வேண்டும். சொற்களுக்காக தவிக்கும் புலவன் வெற்றி பெறுவதில்லை. தமிழ் திறனாய்வு செம்மை பெற்று செழுமையான நூல்கள் தமிழில் மலர வேண்டும். இதற்குரிய அடித்தளத்தை ஆசிரியர்கள் மாணவர்கள் மனதிலே விதைக்க வேண்டும். நற்றமிழ் பயிற்றலுக்கு துணைவருவதே இவ் இலக்கியத்த திறனாய்வுக் கலை ஆகும்.

**தொகுப்புரை**

இலக்கியம் இல்லம் என்றால் அதற்குரிய முகவரி இலக்கியம் குறித்த திறனாய்வு எனலாம். இலக்கியம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானது திறனாய்வு. இலக்கியம் மனிதனுக்குத் தரும் இன்பங்கள் அளவற்றவனவாகும். மகிழ்ச்சியளிப்பதோடு மட்டும் இல்லாமல் அறிவூட்டுவதும் நன்னெறி புகட்டுவதுமாகவும் நாவல் விளங்குகிறது. காலந்தோறும் இலக்கியங்களின் வடிவங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன. சிறுகதை இலக்கியம் உலகத்தில் தோன்றி வளர்ந்து ஒரு நூற்றாண்டுகளாகின்றது. இந்தியாவில் முதன்முதலாக வங்காள மொழியில் சிறுகதை இலக்கியம் தோன்றியது. இன்று குழந்தை இலக்கியம் தனித்தொரு இலக்கியமாக திகழ்கிறது. நாட்டுப்புற இலக்கியங்கள் மூலம் மக்களின் பழக்கவழக்கங்கள் பண்பாடுகள் நம்பிக்கைகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. பயணஇலக்கியமும் இலக்கியத்தை சிறப்பு செய்கிறது. இலக்கிய வளர்ச்சிக்கு அச்சு ஊடகங்களும் பிற தொடர்பு ஊடகங்களும் துணை நிற்கின்றன.

**பரிந்துரை நூல்கள்**

1. அடைக்கலசாமி (1997) இலக்கியவரலாறு, நால்நிலை பதிப்பகம், சென்னை.
2. கணபதி.வி. (1999) நற்றமிழ் கற்பிக்கும் முறைகள், சாந்தா பதிப்பகம், சென்னை.
3. வேணுகோபால் இ.பா.(1991) பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள், சகுந்தலா பதிப்பகம், வேலூர்.
4. கோகிலா தங்கசாமி (2000) தமிழ் கற்பித்தல், அனிச்சம் வெளியீடு, காந்திகிராமம்.
5. ஆர். எட்வின் ஜெயா, தமிழ் கற்பித்தலின் புதுமைகள். ரெத்தினா பதிப்பகம், கன்னியாகுமரி.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 1: Issue II, January-2019
Available at: www.ijtlls.com



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive